ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2141/5 - 2019 මැයි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.23
**2141/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2014, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட, காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச்சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் I ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

கயந்த கருணாதிலக்க
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல. : *4-3/10/2012/*LRB*/324* - II
காணி எடு. உத்தி. இல. : WRSWD&EIP/ACQ/KB/16
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர"
*1200/6*, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2019*, செத்தெம்பர் *03*.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 526 A தும்போவில வடக்கு கிராம அலுவலர் பிரிவில், தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் இல. 521203 மற்றும் 2016.01.15 ஆந் திகதிய கடத்திரல் வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட தொகுதி இல. 18 இல் 01 பகுதி, தாள் இல. 04 இல் கீழ் விபரிக்கப்பட்ட பெயர் மற்றும் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட 02 காணித் துண்டுகள்.

*01.* **துண்டு இல. *438* - தொலமிட்டியாவே ஓவிட்ட - விஸ்தீரணம்: *0.0630* ஹெக்டயார்**

*வடக்கு: துண்டு இல. 437, 436 மற்றும் 439 ; கிழக்கு : துண்டு இல. 439, 471 மற்றும் 470 ; தெற்கு : துண்டு இல. 470 மற்றும் 273 ; மேற்கு: துண்டு இல. 273, 437 மற்றும் 436.*

*01.* **துண்டு இல. *439* - தொலமிட்டியாவே ஓவிட்ட - விஸ்தீரணம்: *0.0147* ஹெக்டயார்**

*வடக்கு: துண்டு இல. 436 மற்றும் 435 ; கிழக்கு : துண்டு இல. 435 மற்றும் 471 ; தெற்கு : துண்டு இல. 471, 470 மற்றும் 438 ; மேற்கு: துண்டு இல. 438 மற்றும் 436.*

*10 -14*